2005 மார்ச் 8]

hostel-ல் என்கிறார்கள். இதில் உடனடியாக நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்ய வேண்டும் என்றும், பரிசீலனை செய்து முதல்வர் அம்மா அவர்கள் மாணவர்களுக்கு உயர்த்தி வழங்க ஆவன செய்வார்கள் என்றும் எதிர்பார்க்கிறோம்.

மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அரசு மானியமாக 80 சதவிகிதமும், தொண்டு நிறுவனம் 20 சதவிகிதமும் கொடுக்கின்றது என்பதனை நான் இங்கே எடுத்துக் கூறியிருந்தேன். மீண்டும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வற்புறுத்துவதனால், இதை அரசு பரிசீலித்து சிந்திக்கும் என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 106, திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

106—

முதியோர் இல்லம்

* **41272—திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆரணி நகரத்தில் முதியோர் இல்லம் துவக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரணி நகரத்தில் முதியோர் இல்லம் தொடங்குவது குறித்த திட்டம், தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. தகுதிவாய்ந்த தனியார் தொண்டு நிறுவனங்கள் முன்வந்தால், விதிமுறைகளுக்குட்பட்டு அரசு மானியம் வழங்க தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 10-25

திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் தொண்டு நிறுவனம் முன்வந்தால் அரசு பரிசீலிக்கும் என்று சொல்லியிருக்கிறார்கள். தனியார் தொண்டு நிறுவனங்களில்கூட சில இடங்களில் கோளாறுகள் ஏற்படுகின்றன. ஆகவே, கேட்காமலேயே கொடுக்கும் மாண்புமிகு தங்கத் தாரகை தமிழக முதல்வர் அம்மாவின் ஆட்சியிலே, அரசே தொடங்க வேண்டுமென்று கேட்டு, அதை

மறுபரிசீலனை செய்து, அரசு தொடங்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் தொண்டு நிறுவனங்கள் செயல்பட்டு வருவதில் கோளாறு இருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துக் கூறினார்கள். எந்த இல்லங்களில், என்ன தவறுகள் நடக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துக் கூறினால், நிச்சயம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும். அதேநேரத்தில் முதியோர் இல்லங்கள் அரசால் தொடங்கப்பட்டு நடத்தப்படுவதில்லை. முதியோர் இல்லங்களை நடத்திட, தொண்டு நிறுவனங்களை ஊக்குவிப்பதுதான் மாநில அரசு திட்டங்களில் ஒன்றாகும். முதியோர் இல்லங்கள் நடத்த, தனியார் தொண்டு நிறுவனங்களை ஊக்குவிப்பதற்காக பராமரிப்பு மானியம் மட்டுமே அரசால் வழங்கப்படுகிறது. அதனால், மாண்புமிகு உறுப்பினர் முயற்சி செய்து, ஆரணி நகரத்தில் தகுதி வாய்ந்த தனியார் தொண்டு நிறுவனங்கள், முதியோர் இல்லங்களை நடத்த முன்வரச் செய்தால், அரசு அதற்கு உதவி செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன்.

திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிட்டது, ஆரணி பகுதியிலே, முதியோர் இல்லம் இல்லை; வாழ்ந்தவர்கள், வரலாறு படைத்தவர்கள் நூற்றுக்கணக்கானவர்கள் இப்போது வறுமைக் கோட்டிலே பல பெரியவர்கள், முதியோர்கள் வசதி இல்லாமல் தவிக்கின்றார்கள். ஆகவே, அம்மா அவர்கள் கருணை உள்ளத்தோடு, இந்த அரசு சார்பிலேயே, ஆரணி தொகுதியிலே, ஒரு முதியோர் இல்லம் தொடங்கி அதற்கு உரிய நடவடிக்கை எடுத்தால், இந்தப் பகுதியிலே இருக்கிற மக்கள், அநாதைகளாக இருப்பவர்கள், பாதிக்கப்பட்ட பல பேர் பயன்பெறுவார்கள் என்பதற்காகத்தான் அதைக் கேட்டிருக்கிறேன். அதை மறுபடியும் மறுபரிசீலனை செய்து அரசே தொடங்க வழி செய்யுமா என்பதைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விக்கு நான் விளக்கமாக பதில் அளித்திருக்கின்றேன்.

2005 மார்ச் 8]

இப்போது இதுபோன்ற தொண்டு நிறுவனங்கள் அரசால் நடத்தப்படுவது இல்லை. அந்தத் தொண்டு நிறுவனங்களை அரசு ஊக்குவிப்பதுதான் மாநில அரசின் திட்டங்களில் ஒன்றாகும். முதியோர் இல்லங்கள் நடத்த தனியார் தொண்டு நிறுவனங்களை ஊக்குவிப்பதற்காக பராமரிப்பு மானியத் தொகையை அரசு வழங்கி வருகிறது என்பதனையும் நான் ஏற்கெனவே கூறியிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மிகவும் ஆர்வமாக, உற்சாகமாக அவருடைய தொகுதியில், ஆரணியில் அரசு முதியோர் இல்லம் ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டிருக்கின்றார். தனியார் தொண்டு நிறுவனங்கள் இந்த ஆரணிப் பகுதியில் முதியோர் இல்லம் ஆரம்பிப்பதற்கு உறுப்பினர் அவர்கள் முயற்சிகளைச் செய்தால் நிச்சயம் அதற்கு அரசு உதவி செய்யும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. போளூர் வரதன்.

திரு. போளூர் வரதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரணி பகுதியிலே முதியோர் இல்லம் அமைப்பதற்கு வாய்ப்பு இல்லை என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஆரணிக்கு அருகில் 15 கிலோ மீட்டரில் திருமலை என்ற கிராமத்தில் ஜைன மதம் சார்பிலே ஒரு தொண்டு நிறுவனம் செயல்பட்டுக் கொண்டு வருகிறது. இப்போதுகூட, 200 குழந்தைகளை வைத்து அவர்கள் எஸ்.எஸ்.எல்.சி. வரைக்கும் school நடத்திக் கொண்டு வருகிறார்கள்; நன்றாக நடத்தி வருகிறார்கள். கடந்த 4, 5 ஆண்டுக் காலமாக முதியோர் இல்லம் திறப்பதற்கு அரசிடத்திலே அனுமதி கோரியும் இதுநாள் வரையில் அனுமதி கிடைக்கவில்லை. இரண்டு மாதங்களுக்கு முன்புகூட நீங்கள் பேப்பரில் பார்த்திருக்கலாம், வாலாஜா அருகில் ஒரு பெரியவர், யாரும் இல்லாத நிலையில் ரோட்டிலே கிடந்தார், 5 நாட்கள் கேட்பாரற்றுக் கிடந்து, பின்னர் hospital-க்கு கொண்டுபோனார்கள்; அங்கு இறந்துபோனார் என்று செய்தி வந்தது. கலமூர் என்ற பகுதியைச் சேர்ந்தவர். இப்படி வயதானவர்களைக் காப்பாற்றுவதற்கு இல்லாத ஒரு சூழ்நிலை அந்தப் பகுதியிலே நிரம்ப இருக்கிறது. ஜைன மதம் அவர்களைக் காப்பாற்றுவதற்கு முன் வருகிறது. அந்த மதத்தின் சார்பிலே நான்கு ஆண்டுகளாக இந்தத் தொண்டு நிறுவனம் நடத்துவதற்கு அனுமதி கேட்டும், இதுவரையில் அரசிடமிருந்து எந்தப் பதிலும் இல்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனியார் நடத்துவதற்கு ஏற்பாடு செய்தால் வழங்கப்படும் என்று சொல்கிறார்கள். திருமலையில் இயங்குகிற அந்த ஜைன மதத் தொண்டு நிறுவனத்திற்கு அனுமதி அளித்தால், அதை நடத்துவதற்கு அவர்கள் தயாராக

இருக்கிறார்கள்; அரசு ஆவன செய்யுமா என்பதை உங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-30

மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், ஆரணி பகுதியில் முதியோர் இல்லங்கள் ஆரம்பிப்பதற்கு வாய்ப்பு இல்லை என்று நான் சொன்னதாக, அவர் இங்கு பேசுகின்ற நேரத்தில் எடுத்துக் கூறினார்கள். ஆனால், நான் அவ்வாறு கூறவில்லை. ஏற்கெனவே மாண்புமிகு அண்ணன் ஜெமினி ராமச்சந்திரன் அவர்கள் பேசுகின்ற நேரத்தில், அந்தப் பகுதியில் தனியார் தொண்டு நிறுவனங்களை முதியோர் இல்லங்கள் நடத்த முன்வரச் செய்தால், அரசு அதற்கு உதவி செய்யும் என்றுதான் நான் கூறியிருந்தேன். அதேநேரத்தில், ஏற்கெனவே அங்கு ஜைன மதத்தின் சார்பாக ஒரு தொண்டு நிறுவனம் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்றும், அதற்கு அரசின் சார்பாக அனுமதி இல்லை என்றும் இங்கு எடுத்துக் கூறினார்கள். அதைப்பற்றிய விவரங்களை மாண்புமிகு உறுப்பினரவர்கள் என்னிடம் கொடுப்பாரேயானால், நிச்சயம் அவற்றைப் பரிசீலித்து, அதற்கு அனுமதி வழங்க அரசு ஏற்பாடு செய்யும் என்பதனையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி காசாம்பு பூமாலை.

திருமதி காசாம்பு பூமாலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதியோர் இல்லங்களைத் தனியார் தொண்டு நிறுவனங்கள் அமைக்கலாம் என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அதற்கு அடிப்படைத் தகுதி என்ன என்பதை அமைச்சர் அவர்கள் வாயால் அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் அதற்குத் தனிக் கேள்விப் போட்டால், நிச்சயம் அதற்கு என்ன தகுதி இருக்க வேண்டும் என்பது குறித்து நான் விளக்கமாகப் பதில் அளிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 107, திரு. ப. சிதம்பரம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.